# புறப்படு தமிழா புறப்படு!



புறப்படு தமிழா புறப்படு!
புறப்படு தமிழா புறப்படு!
புரட்சிப்பண்பாடி புறப்படு!
இலட்சியத்துடனே புறப்படு!
எழுஞாயிறாய் புறப்படு!

கலைகள்யாவும் கற்றறிந்த
காளையர்வாழும் தமிழ்நாடு!
பீரங்கியென்ன போரேவரினும்
புறப்படத்துணிந்தது தமிழ்நாடு!

விளைவுகள்கண்டு அஞ்சிடாத
வீரர்கள்கொண்ட தமிழ்நாடு!
கோடானகோடி நிதிதந்த
கலைஞர் ஆண்ட தமிழ்நாடு!

உதிரம் சிந்திட அஞ்சாத
உணர்ச்சிமிக்க பெண்களையே
ஈன்றெடுத்த தாயினத்தை
என்றும்கொண்ட தமிழ்நாடு!

லட்சக்கணக்கில் ஈழத்திலே
சிங்களர்களின் தோட்டாக்களை!
தோளில்சுமந்த வீரஇனம்
தோல்விஅறியா தமிழினமே!

சோரம்போன தமிழனையே!
சொல்லுக்குக்கூட கூறிடவும்
சான்றாய்தரவும் இயலாத
சிங்கங்கள்வாழும் தமிழ்நாடு!

கரிகால்வளவனும் இராஜராஜனும்
சேரமன்னன் செங்குட்டுவனும்
படைநடத்தி பகைவென்று
இமயம் வென்ற தமிழ்நாடு!

புலியும்மீனும் விற்கொடியும்!
புவியையாண்ட தமிழ்கொடியை
இந்தியதேச உச்சத்திலே
பறக்கவிட்ட தமிழ்நாடு!

வேலுநாச்சியும் வீரபாண்டியும்
மருதுபாண்டியும் சுந்தரலிங்கமும்
பூலித்தேவனும் ஒண்டிவீரனும்
சமர்புரிந்த தமிழ்நாடு!

அலெக்சாண்டரே அஞ்சிநடுங்கிய
ஆங்கிலேயனே அரண்டுஓடிய!
வீரத்தழும்புகள் நிரம்பப்பெற்ற
வேந்தர்கள்வாழ்ந்த தமிழ்நாடு!

சுதந்திரப்போரில் தூயத்தமிழில்!
பாடல்கள்எழுதிய பாரதியாரின்
செக்கிழுத்த சிதம்பரனாரின்
கொடிக்குமரனின் தமிழ்நாடு!

நெருப்பிற்கிணை பெரியாரும்
அன்பிற்கிணை அண்ணாவும்
முத்தமிழ்அறிஞர் கலைஞரும்
இந்தியைவிரட்டிய தமிழ்நாடு!

பெண்கள் கல்விக்கற்றிடவும்
புதுமைப்பெண் திட்டத்தினால்
பெருந்தொகை ஈந்திடும்
தளபதிஆளும் தமிழ்நாடு!

அன்பாய்தளபதி அழைத்தாலோ
அலைகடலெனவே ஆர்ப்பரித்து
புலியெனப்பாயத் தயாராயிருக்கும்
உடன்பிறப்புகளின் தமிழ்நாடு!

விளையாட்டுத்துறை அமைச்சராகி
வேங்கைப்பலரை உருவாக்கி
உதவித்தொகை வழங்கிமகிழும்
உதயநிதியின் தமிழ்நாடு!

உதயநிதியின் இனியஉதயம்!
உலகுபோற்றும் சிறந்தஉதயம்!
அவரால்மகிழும் தமிழ்நாடு!
அன்பில்உயர்ந்த தமிழ்நாடு!

ஏழையர்வயிறு காயிது
எளியவர்இல்லம் வாடுது
ஏய்ப்பவர்மனமோ மகிழுது
என்பவரில்லா தமிழ்நாடு!

2026வரும் தேர்தலிலே!
தி.மு.க. ஆட்சி மீண்டும்மலர
தித்திக்கும்தேன் வெற்றிகளை!
வழங்கப்போகும் தமிழ்நாடு!

புறப்படு தமிழா புறப்படு
புரட்சிபண்பாடி புறப்படு
இலட்சியத்துடனே புறப்படு
எழுஞாயிறாய் புறப்படு!

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
தி.மு.க.
இலக்கிய அணி





மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் நேற்று (17.05.2025) சென்னை, சைதாப்பேட்டையில், 154 மகளிர்களுக்கு தலா ஒரு லட்சம் மானியத்துடன் கூடிய ஆட்டோ வழங்கும் நிகழ்ச்சியை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் காரப்பாக்கம் கணபதி. எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஸ்ரீதரன், தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் பாஸ்கர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழக துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. பங்கேற்பு!

## சென்னை மேற்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம்!

### மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு அறிக்கை!



சென்னை, மே 18-
சென்னை மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை 19.05.2025 திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள "பார்க் எலன்சா ஹோட்டல்", 2வது தளத்தில் உள்ள கூட்ட அரங்கத்தில் மாவட்ட அவைத்தலைவர் து.விக்டர் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா,எம்.பி. அவர்கள் பங்கேற்று வருகிற 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை வழங்குகிறார். கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கலந்து கொள்கிறார்.

இதில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குபட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் வட்டக் கழக செயலாளர்கள் ஆகிய அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை விடுத்துள்ளார்.

### நாமக்கல் – கரூர் தேசிய நெடுஞ்சாலை சின்ன வடுகப்பட்டி அருகில் நிகழ்ந்த

## சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே.18-
கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், ஆத்தூர் கிராமம், நாமக்கல்-கரூர் தேசிய நெடுஞ்சாலை, சின்ன வடுகப்பட்டி அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு :

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், ஆத்தூர் கிராமம், பரணி பார்க் பள்ளியின் கிழக்குப் பக்கம், நாமக்கல் - கரூர் தேசிய நெடுஞ்சாலை, சின்ன வடுகப்பட்டி அருகில் நேற்று (17.5.2025) காலை சுமார் 5.30 மணியளவில் பெங்களூருவிலிருந்து நாகர்கோவில் நோக்கிச் சென்ற தனியார் ஆம்னி பேருந்து ஒன்று முன்னாள் சென்ற டிராக்டர் ஒன்றின் மீது மோதி பின்னர் எதிர் சாலையில் கோவில்பட்டியிலிருந்து சேலம் நோக்கி வந்துகொண்டிருந்த மேக்ஸி கேப் வாகனம் ஒன்றின் மீது எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் மேக்ஸி கேப் வாகனத்தில் பயணம் செய்த தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியைச் சேர்ந்த திரு.சசிகுமார் (வயது 52) த/பெ.துரைராஜ், திரு.அருண் திருப்பதி (வயது 45) த/பெ.கனகராஜ், செல்வன்.காமாட்சி அஸ்வின் (வயது 10) த/பெ.அருண், விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி.எழில் தஷனா (வயது 12) த/பெ.சரவணக்குமார் ஆகிய நான்கு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி. ஹேமவர்ஷினி (வயது 20) த/பெ.பாண்டியன் என்பவர் சிகிச்சைக்காக கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிசிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் 27 நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### மதுரை வடக்கு மாவட்டம்

## பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புக்கான தேர்தல் - வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை வடக்கு மாவட்டக் கழக நிர்வாக அமைப்பில் "மதுரை மேற்கு" சட்டமன்றத் தொகுதியினை சேர்த்து கடந்த 13.2.2025 அன்றைய தலைமைக் கழக அறிவிப்பு வெளியிட்ட காரணத்தால், மதுரை வடக்கு மாவட்டத்தில் இரண்டு பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

மதுரை வடக்கு மாவட்டம், இரண்டு பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, மே 20 (செவ்வாய்க் கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் மதுரை வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/ பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

தலைமைக் கழகத்தில், வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



பெருங்களத்தூர் தெற்கு பகுதி 56 ஆவது வார்டுக் கழகம் சார்பாக 56 ஆவது வார்டு இளைஞரணி எஸ். அருண் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட நீர்மோர் பந்தலை பகுதிக் கழக செயலாளரும் தாம்பரம் மாநகராட்சி தி.மு.க.மாமன்றக் குழு தலைவருமான பெருங்களத்தூர் எஸ்.சேகர் திறந்து வைத்தார். இதில் பகுதி துணைச் செயலாளர் பி.புகழேந்தி, வட்டச் செயலாளர் பி.சுரேஷ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.ஓம்பிரகாஷ், மாநகர பிரதிநிதி கே.சுந்தர், ஆர்.ரேமன், ஏ.குமரன், எஸ்.எம்.சோமசுந்தரம், சாது ரெனால்ட், ஜாகிர் உசேன், ராகுல், அன்சாரி, டி.கே.கோட்டி மற்றும் ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எ.அஸ்வின்குமார் தலைமையில்

## 132வது வட்டத்தில் நீர்மோர் தண்ணீர் பந்தல் திறக்கும் விழா!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - தூத்துக்குடி எஸ்.ஜோயல் திறந்து வைக்கின்றனர்

சென்னை மே 18
மக்கள் தாகம் தீர்க்கும் நீர்மோர் தண்ணீர் பந்தல் திறக்கும் விழா சென்னை தென் மேற்கு மாவட்டம் இளைஞரணி சார்பில் தியாகராயநகர் மேற்கு பகுதி 132 வது வட்டத்தில் யூனிடெட் இந்தியா காலனி பாத்திமா அன்னை ஆலயம் அருகில் இன்று (18.05.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10:30 மணியளவில் மாவட்ட துணை அமைப்பாளர் எ.அஸ்வின்குமார் தலைமையில் தி.நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி கே.எஸ்.வெல்டிங்மணி. கோடம்பாக்கம் மு.சத்யா, ராஜா அன்பழகன் எம்.சி,. வட்ட செயலாளர் நமோ.முரளி, கே.எஸ். வெல்டிங்ராஜா, புலியூர் டி.மோசஸ் , எஸ்.உமாசங்கர் கார்த்திகா பாஸ்கர், டேன்டி பிரகாஷ் தினோஷ் மாணிக்கம் த.விக்னேஷ் ஆ.மணிரத்தினம் க.மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் ரவி, பிரசாத், எம்.மனோஜ், ம.ஜெகன், ரமேஷ், உதயா, சரவணா, அருண், ஆனந்த், விக்கி, ராகுல், பாபு, அஜித், கணேஷ், ராஜ் வரவேற்கின்றனர்.

சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொள்கின்றனர்

இதில் சா.தேவராசு, க.சந்துரு, சி.சங்கர், டி.வேலு, த.ராஜசேகரன், புலியூர் எம்.ராமசந்திரன், மேம்பாலம் எம்.சேகர், அ.கோவிந்தன், பி.வேலு, எம்.குப்பம்மாள், எஸ்.விஜயன், பிலிப் சுந்தர், எஸ்.ரஜினி, கே.தேவராஜ், அ.ராமநாதன், நோபல் வசந்த், சசி, எஸ்.வேலாயுதம், து.மங்கள், எஸ்.கே.நசீர், நா.மு.தமிழ், க.ச.இளவரசன், எஸ்.மணிகண்டன், து. ஆனந்த்ராஜ், மு.பாலகுரு, பா.புகழ், வழக்கறிஞர் ஆர்.பரத், சாந்தி, பி.எஸ்.ராஜன், எம்.அப்பு, எம்.ரவி பிரசாத், மு.உதயநிதி, விக்கி, சி.ராஜன், கிருஷ்ணமூர்த்தி, க.சாகுல், டி.செல்வம், ஆர்.சேகர், கலையரசன், சி.கே.நரேன், ஜோசப் தங்கராஜ், ரா.அன்பழகன் சாந்தி, ரேவதி, பா.கார்த்தி, இரா மனோ, து.விவேக், ம.லாசர் சஞ்சய், ச.நவிதா, ச.தீபிகா, மற்றும் ந.மு.தமிழ் .கார்த்திக் கணேஷ் வழக்கறிஞர் ஆர்.பரத் செந்தில் ரங்கா பா.சங்கர், தளபதி எம்.புகழ், கார்த்தி, மனோ, மணிகண்டன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்

நிகழ்ச்சி ஏற்பாட்டை பகுதி பிரதிநிதி புலியூர் ஒய். எட்வின் சென்னை தென் மேற்கு மாவட்ட திமுக இளைஞரணி செய்துள்ளது.



சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இரா. வினோத் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.சங்கர் கணேஷ் எம்.சி.கலந்து கொண்டு (20.05.2025) அன்று நடைபெற உள்ள இளைஞரணி சமுக வலைதள பயிற்சி பாசறை குறித்து ஆலோசனை வழங்கினார். இதில் ஒன்றிய துணை அமைப்பாளர்கள் எஸ்.பி. முரளிகிருஷ்ணன், கே.கே. செந்தில்குமார்,எம். சபரிராஜா,பி.மனிஷ் மற்றும் எஸ். ஜனார்தனம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.இதில் இளைஞரணி பொறுப்பிற்கான படிவங்களை வழங்கினார்கள்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - எஸ்.முரளி - கோ.வி.லெனின் பங்கேற்பு!

## 171 'அ' வட்டக் கழக நிர்வாகிகள் - பாகப் பொறுப்பாளர்கள் கூட்டம்!

### வட்டச் செயலாளர் பா. பொன்னுசாமி அறிக்கை!

சென்னை, மே 18-
171அ வட்டக் கழக சார்பில் வட்ட நிர்வாகிகள் பாகப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (18.05.2025 - ஞாயிற்றுக்கிழமை) நண்பகல் 12மணி அளவில் , மயிலாப்பூர் பகுதி கழக அலுவலகத்தில் 171 அ வட்டக் கழக செயலாளர் பா.பொன்னுசாமி எனது தலைமையில் நடைபெறுகிறது.

இதில் பகுதி கழகத்தின் செயலாளர் எஸ்.முரளி, தொகுதி பார்வையாளர் கோ.வி.லெனின் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ.

கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்க உள்ளார்.

இக்கூட்டத்தில் 171 அ வட்டக் கழகத்தை சார்ந்த. பாக முகவர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டக் கழக செயலாளர் பா. பொன்னுசாமி தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முல்லை வடிவேல்
### மே 18 (1999)



கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து உறுப்பினர். செயற்குழு – பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர்.

தமிழக சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பு வகித்தவர். ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தின் முதல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து பதினாறு ஆண்டுகள் அப்பொறுப்பு வகித்தவர்.

வேலூர் கூட்டுறவு வங்கியின் தலைவராகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு, கருப்புக் கொடி, விலைவாசி உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**